# கணிதம்

## பகுதி 2

## வகுப்பு I

MATHEMATICS
PART - 2
STD I
Tamil Medium

கேரள அரசு
பொதுக் கல்வித்துறை

தயாரிப்பு
மாநிலக் கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம் (SCERT) கேரளம்

2024

## தேசிய கீதம்

ஜன கண மன அதிநாயக ஜய ஹே
பாரத பாக்ய விதாதா
பஞ்சாப சிந்து குஜராத மராட்டா
திராவிட உத்கல பங்கா
விந்திய ஹிமாசல யமுனா கங்கா
உச்சல ஜலதி தரங்கா
தவ சுப நாமே ஜாகே
தவ சுப ஆசிஸ மாகே
காகே தவ ஜய காதா
ஜன கண மங்கள தாயக ஜய ஹே
பாரத பாக்ய விதாதா
ஜய ஹே! ஜய ஹே! ஜய ஹே!
ஜய ஜய ஜய ஜய ஹே!

## உறுதிமொழி

இந்தியா எனது நாடு. இந்தியர் அனைவரும் என் உடன்பிறந்தோர்.

எனது நாட்டை நான் உயிரினும் மேலாக மதிக்கிறேன். அதன் வளம் வாய்ந்த பல்வகைப் பரம்பரைப் புகழில் நான் பெருமைகொள்கிறேன். அதற்குத்தக நான் என்றும் நடந்துகொள்வேன்.

என் பெற்றோர், ஆசிரியர், மூத்தோர் இவர்களை நான் நன்கு மதிப்பேன்.

எல்லாருடனும் நான் பண்புடன் பழகுவேன். எனது நாட்டினிடமும் நாட்டு மக்களிடமும் பக்தியுடன் இருப்பேன் என உறுதி கூறுகிறேன். அவர்களின் நலத்திலும் வளத்திலும் எனது இன்பமும் அடங்கியிருக்கிறது.

# I

# கணிதம்

*Prepared by*

**State Council of Educational Research and Training (SCERT)**
Poojappura, Thiruvananthapuram 695012, Kerala
Website : www.scertkerala.gov.in, e-mail : scertkerala@gmail.com
Typeset and design by : SCERT
First Edition - 2024
Printed at : KBPS, Kakkanad, Kochi-30
© Department of General Education, Government of Kerala

அன்புள்ள குழந்தைகளே,

நம்மைச் சுற்றி உள்ளவைகளைச் சரியாகத் தெரிந்து கொள்ளவும் புரிந்து கொள்ளவும் கணிதம் அவசியம்.

கணிதம் என்பது எண்கள், வடிவங்கள், எண்ணுதல், கூட்டல், கழித்தல் வரைதல் மற்றும் பகுத்தறிதல் ஆகியவற்றின் தொகுப்பு ஆகும். எண்கள், வடிவங்கள் அடையாளங்கள் ஆகியவற்றைப் பயன்படுத்தி செய்வதே கணிதம். சரியாகச் சிந்தித்து செயல்களைப் புரிந்து கொள்ளவும் சொல்வதற்குமான திறன் கணிதத்தின் வாயிலாகக் கிடைக்கிறது.

கணிதம் இனிமையானது, குழுக்களாக செயல்பாடுகள் செய்தும், பார்த்தும், கேட்டும், சிந்தித்தும் கருத்து தெரிவித்தும் நாம் கணிதத்தைக் கற்கத் தொடங்குவோம்.

விளையாடியும், கதைகள் சொல்லியும், பாட்டு பாடியும், வண்ணப்படங்கள் வரைந்தும், வண்ணம் தீட்டியும் வழிமுறைகள் கண்டறிந்தும் நாம் கணிதத்துடன் கைகோர்ப்போம்.

வாழ்த்துக்களுடன்,



முனைவர். ஜெயபிரகாஷ். ஆர்.கே.
இயக்குநர்
எஸ்.ஸி.இ.ஆர்.டி. கேரளம்.

# Textbook Development Team


**Advisor**

**Dr. E. Krishnan**
Head (Rtd.) Department of Mathematics,
University College, Thiruvananthapuram

**Chairperson**

**Dr. Narayananunni M.P.**
Senior Lecturer (Rtd.), DIET Malappuram

**Experts**

**Jayadevan S.K.**
Senior Lecturer,
DIET Kannur

**K.R. Muraleedharan Pillai**
Senior Lecturer (Rtd.),
DIET, Kollam

**T. Suresh**
Senior Lecturer (Rtd.),
DIET, Kasaragod

**Members**

**K.K. Suresh Babu**
Teacher (Rtd.),
Palayad Central JB School,
Palayad, Kannur

**Sajeevan C.V.**
LPSA, ALPS Kariyil,
Cheruvathoor,
Kasaragod

**Soudamini K.V.**
HM, GLPS Maithani,
Cheruvathoor,
Kasaragod

**C.G. Sreekumar**
HM, GLPS Nettayam,
Kollam

**Vinayachandran K.**
LPSA, Izzathul Islam ALPS
Chandera, Kasaragod

**Rajan Appyal**
HM, GLPS Kozhummal,
Kannur

**Sasidharan V.P.**
HM, GLPS Valvakkad,
Kasaragod

**Anithakumari A.**
HM (Rtd.),
GLPS, Sasthamangalam,
Thiruvananthapuram

**Suresh C.**
Teacher (Rtd.),
GLPS Pariyapuram,
Malappuram

**Rejisha K.**
UPST, GVHSS
Madappally, Kozhikode

**Jabir K.**
HST, GFHSS
Padnekadappuram, Kasaragod

**Manukumar V.**
LPST, GMLPS
Veykkal, Kollam

**N.T. Rajeev**
GHSS Thariyode,
Wayanad

**Shilpa S. Nair**
Animator, Illustrator,
Kollam

**Anoop K.P.**
HST Drawing, PMSAPTHSS
Kakkove, Malappuram

**Santhosh Veliyannur**
Kottayam

**C.N. Raju**
Artist (Rtd.) KBPS, Ernakulam

**Tamil Version**

**Dr. Nisha Raffi.**
Associate Professor (Rtd.), University College,
Thiruvananthapuram.

**Mr. C. Monivannan**
(Rtd.) P.D. Teacher, GLPS Chalai,
Thiruvananthapuram.

**R. Russel Raj**
(Rtd.) HM, ALPS Pallivasal, Munnar, Idukki.

**R. Selvakumar**
(Rtd.) HM, ALPS Periavurrai, Munnar, Idukki.

**Acadamic Co-ordinator**

**Dr. Meena S.**
Assistant Professor, SCERT.



மாநிலக் கல்வியாராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம் (SCERT)

வித்தியாபவன், பூஜப்புரை, திருவனந்தபுரம், 695 012

# உள்ளடக்கம்


6. அலமாரியில் நண்பர்கள் ........ 104

7. கூடியதும் குறைந்ததும் ........ 124

8. நாணய கிலுக்கம் ........ 136

9. நேரமாச்சு ........ 150

10. பொம்மை வேண்டுமா... பொம்மை........ 164

11. எண்ணலாம் அடுக்கிவைக்கலாம் ........ 185

# இந்திய அரசமைப்பு

## முகப்புரை

இந்திய மக்களாகிய நாம். இந்திய நாட்டினை இறையாண்மையும் சமநலச்சமுதாயமும் சமயச்சார்பின்மையும் மக்களாட்சிமுறையும் அமைந்ததொரு குடியரசாக நிறுவவும்.

அதன் குடிமக்கள் அனைவரும்

சமுதாய, பொருளியல், அரசியல் நீதி,<br>
எண்ணம், அதன் வெளியீடு, கோட்பாடு,<br>
சமயநம்பிக்கை, வழிபாடு இவற்றில் தன்னுரிமை,

சமுதாயப்படிநிலை, வாய்ப்புநலம் இவற்றில் சமன்மை<br>
ஆகியவற்றை எய்திடச் செய்யவும்.

அவர்கள் அனைவரிடையேயும்

தனிமனிதனின் மாண்பு, நாட்டுமக்களின் ஒற்றுமை,<br>
ஒருமைப்பாடு இவற்றை உறுதிப்படுத்தும்<br>
உடன்பிறப்புரிமையினை வளர்க்கவும்

உள்ளார்ந்த உறுதியுடையராய்,

நம்முடைய அரசமைப்புப் பேரவையில், 1949 நவம்பர் இருபத்தாறாம் நாளாகிய இன்று, ஈங்கிதனால், இந்த அரசமைப்பினை ஏற்று, இயற்றி, நமக்கு நாமே வழங்கிக்கொள்கிறோம்.





நான்......................................................................................................

...............................................................வகுப்பில் படிக்கிறேன்.



என் அம்மா :

என் அப்பா :



என் ஆசிரியை :

எனது பள்ளிக்கூடம் :

எனது ஆதார் எண் :

கைப்பேசி எண் :




104

# 6

# அலமாரியில் நண்பர்கள்



# பிறந்தநாள் பரிசு




10 புத்தகங்கள்
உள்ள
2 கட்டுகள்.

மேசையின் மேல் மொத்தம் எத்தனை புத்தகங்கள் உள்ளன?

10 + 10 = ☐

புத்தகங்களை ஒரே எண்ணிக்கையுள்ள 4 கட்டுகள் ஆக்க வேண்டும். ஒரு கட்டிலுள்ள புத்தகங்கள் எத்தனை? ☐



## அலமாரியில் புத்தகங்கள்

இரண்டு அறையிலும் மொத்தமுள்ள புத்தகங்கள் எத்தனை?

10-உம் 10-உம் இருபது [20] புத்தகங்கள்

மூன்றாம் அறையில் 10 புத்தகங்கள் வைத்தால்?

20-உம் 10-உம் முப்பது [30] புத்தகங்கள்




நான்காவது அறையிலும் வைத்த போது

30-உம் 10-உம் நாற்பது [ ] புத்தகங்கள்

பத்து புத்தகங்களை ஐந்தாவது அறையிலும் வைத்தார்கள்.

இப்போது புத்தகங்கள் எத்தனை?

$40 + 10 =$ [ ] ஐம்பது புத்தகங்கள்

அலமாரியில் மொத்தமுள்ள புத்தகங்கள்.

$10 + 10 + 10 + 10 + 10 =$ [ ]

## புத்தகங்கள் வகுப்பிற்கு.

வகுப்புத் தலைவர்கள் அவர்களின் வகுப்பிற்கான புத்தகங்களை எடுத்தனர். ஒவ்வொரு கட்டிலும் 10 புத்தகங்கள். ஒவ்வொரு வகுப்பிற்கும் எடுத்த புத்தகங்களைப் பாருங்கள்.

### ஒன்றாம் வகுப்பு



வகுப்பு 1

10 + 10 + 10 = 30

20 + 10 = 30

### இரண்டாம் வகுப்பு



வகுப்பு 2

10 + 10 + 10 + 10 = ___

20 + ___ + 10 = 40

___ + ___ = 40

### மூன்றாம் வகுப்பு



வகுப்பு 3

___ + ___ + ___ + ___ + ___ = 50

20 + 20 + ___ = 50

40 + ___ = 50

10 + ___ + ___ + ___ + ___

+ ___ + ___ + ___ = ___

**நான்காம் வகுப்பு**

50 + ___ + ___ + ___ = 80

60 + ___ + ___ = 80

___ + 10 = 80



வகுப்பு 4

10 + ___ + ___ + 10 + ___ +

___ + ___ + ___ + ___ = ___

50 + ___ + ___ + 10 + ___ = 90

___ + ___ + ___ + ___ = 90

**ஐந்தாம் வகுப்பு**

___ + ___ + ___ = 90

___ + ___ = 90



வகுப்பு 5

எந்தெந்த வகுப்பு புத்தகங்களின் எண்ணிக்கையைச் சேர்த்தால் 4-ஆம் வகுப்பிலுள்ள புத்தகங்களின் எண்ணிக்கையாகும்?

☐ + ☐ = ☐

ஐந்தாம் வகுப்பு புத்தகங்களின் எண்ணிக்கை கிடைக்க எந்தெந்த வகுப்பு புத்தகங்களின் எண்ணிக்கையை சேர்க்க வேண்டும்? எண் எழுதுங்கள்.

☐ + ☐ = ☐

ஒன்றாம் வகுப்பை விட நான்காம் வகுப்பில் எத்தனைப் புத்தகங்கள் கூடுதல்? ☐




| வகுப்பு | எண்ணிக்கை |
|---|---|
| | |

## பத்தின் காட்சிகள்.

ஒவ்வொரு கூட்டத்திற்கும் நேராகக் கொடுத்துள்ள எண்ணிக்கை சரியெனில் ✓ உம் தவறெனில் ✗ உம் இடவும்.



40 ☐



30 ☐



50 ☐



80 ☐



70 ☐



50 ☐

நீங்கள் எவ்வாறு கணக்கிட்டீர்கள்?

நண்பர்கள் எவ்வாறு கணக்கிட்டனர்?

## மாஞ்சோலையில்

பள்ளி விட்டு வரும் வழியில் மாளுவும் நண்பர்களும் நாணு மாமாவின் மாந்தோட்டத்திற்குச் சென்றனர்.






மாளு 10 மாங்காய்களை வேறு கூடையில் வைத்தாள். இப்போது இரண்டு கூடையிலும் சேர்த்து எத்தனை மாங்காய்கள் உள்ளன?

50-உம் 10-உம் ☐ மாங்காய்கள்

இபா 10 மாங்காய்கள் கூடையில் வைத்தாள்

இப்போது 60-உம் 10-உம் ☐ மாங்காய்கள்

அருண் 10 மாங்காய்கள் கூடையில் வைத்தான்.

70-உம் 10-உம் ☐ மாங்காய்கள்

ஷெரின் 10 மாங்காய்கள் கூடையில் வைத்தாள்.

80-உம் 10-உம் ☐ மாங்காய்கள்

ஆசிப் 10 மாங்காய்கள் கூடையில் வைத்தான்

90-உம் 10-உம் = 100 நூறு மாங்காய்கள்

## 10-கள் சேர்ந்தால்

| | | | |
|---|---|---|---|
|  | 10 | 10 | பத்து |
|  | 10+10 | | இருபது |
|  | 20+10 | | முப்பது |
|  | 30+........ | | நாற்பது |
|  | ........+10 | | ஐம்பது |
|  | 50+10 | | அறுபது |
|  | 60+10 | | எழுபது |
|  | ........+10 | | எண்பது |
|  | 80+10 | | தொண்ணூறு |
|  | 90+10 | | நூறு |

எல்லா மாங்காய்களையும் கூடையில் வைத்தனர்.
நாணுமாமா மகிழ்ச்சியடைந்தார்.

## மாலை கோர்க்கலாம்

மாளுவும் தோழியும் மாலை கோர்க்கின்றனர்.
சிவப்பு, மஞ்சள் முத்துக்கள் உள்ளன.




## முத்துக்கள் கோர்க்கலாம்.

| | மஞ்சள் | சிவப்பு | மொத்த முத்துக்கள் |
|---|---|---|---|
|  | 20 | 1 | 21 இருபத்தி ஒன்று |
|  | 20 | 2 | இருபத்தி இரண்டு |

| | மஞ்சள் | சிவப்பு | மொத்த முத்துக்கள் |
|---|---|---|---|
|  | 20 | ☐ | இருபத்தி மூன்று |
|  | ☐ | 4 | இருபத்தி நான்கு |
|  | ☐ | ☐ | இருபத்தி ஐந்து |

## முத்துக்களில் எண்கள்

விடுபட்ட எண்களை எழுதுங்கள்.




முத்துக்கள் கோர்த்தபின் அவர்கள் ஓமனா மாமியின் கடைக்குச் சென்றனர். அங்கு என்னென்ன பொருட்கள் இருந்தன? ஒவ்வொன்றும் எத்தனை வீதம்? எண்ணிக்கையை கட்டத்தில் எழுதுங்கள்.





☐ + ☐ = ☐

30 மிட்டாய்கள் ஆக இனி எத்தனை மிட்டாய் வேண்டும்?

29 -உம் ☐ -உம் 30 மிட்டாய்கள்.

ஒவ்வொரு குழுவையும் எண்ணி எழுதுங்கள்.



☐ + ☐ = ☐



☐ + ☐ = ☐



☐ + ☐ = ☐



☐ + ☐ = ☐

## பொட்டுகள்



மொத்தம் எத்தனை பொட்டுகள்? ☐

எல்லோரும் ஒரே போல்தானா கணக்கிட்டனர்? சொல்லுங்கள்.

## பலநிற முத்துக்கள்

மாலை கோர்க்க பல நிறத்திலுள்ள முத்துக்களை ஐந்து பேருக்கும் கொடுத்தனர்? ஒவ்வொருவருக்கும் எத்தனை முத்துக்கள் வீதம் கிடைத்தது?

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| இபா | 10 | 10 | 10 | 7 | | | |
| அருண் | 10 | 10 | 10 | 5 | | | |
| ஷெரின் | 10 | 10 | 10 | 10 | 10 | 6 | |
| மாளு | 10 | 10 | 10 | 10 | 10 | 8 | |
| ஆசிப் | 10 | 10 | 10 | 10 | 4 | | |

முத்துக்களின் எண்ணிக்கை (பெரியதிலிருந்து சிறியது) இறங்கு வரிசையில் எழுதுங்கள்.

மாளுவும் நண்பர்களும் பல நிறமுள்ள முத்துக்களை எண்ணி எடுத்தனர். ஒவ்வொரு நிறமும் எத்தனை வீதம் உள்ளது?

| | | |
|---|---|---|
| சிவப்பு | 50-உம் 4-உம் | 54 |
| மஞ்சள் | 30-உம் 5-உம் | .............. |
| பச்சை | 60-உம் 6-உம் | .............. |
| நீலம் | ..............-உம் ..............-உம் | 47 |
| கறுப்பு | ..............-உம் 8-உம் | 28 |

# ஏணியும் பாம்பும்

ஏணியும், பாம்பும் விளையாட வேண்டும். அதற்காக 1 முதல் 100 வரையுள்ள எண்களை வரிசையாக கட்டத்தில் எழுதுங்கள். பாம்பு, ஏணி படம் வரைய மறக்க வேண்டாம்.



முதல் படத்தில் உள்ளது போல் மற்ற இரண்டு படங்களிலும் விடுபட்ட எண்களை எழுதவும்.




மாதிரியை பார்த்தீர்களல்லவா.
கீழே உள்ள படங்களிலும் எண்களை எழுதுங்கள்.



தொடர்ச்சியான எண்களை எழுதி கட்டங்களை நிரப்புங்கள்.




| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | | 91 | | | |
| 79 | | | | | 74 | |
| | | | | | | 93 |

விடுபட்ட கட்டங்களை நிரப்புங்கள்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 60 | 50 | 40 | | | |
| 45 | 55 | 65 | | | |
| 35 | 40 | 45 | | | |

## மோட்டார் சைக்கிள் பந்தயம்.

மோட்டார் சைக்கிள் சாலையின் பக்கத்தில் மோதினால் விளையாட்டு முடிவடையும்.

25–இல் இருந்து தொடங்குகிறது. 5 ஐ கூட்டினால் கிடைக்கும் கட்டங்களிலிருந்து 10 தங்க நாணயங்கள் கிடைக்கும்.

26 –இல் இருந்து தொடங்குகிறது. 2 கூட்டினால் கிடைக்கும் கட்டங்களிலிருந்து 5 தங்க நாணயங்கள் கிடைக்கும்.



ராசி 57–இல் வரும் போது வெளியேறினாள். எத்தனை தங்க நாணயம் கிடைத்திருக்கும்? எந்தெந்த எண்ணுள்ள கட்டங்களிலிருந்து நாணயங்கள் கிடைத்திருக்கும்? எழுதுங்கள் அவற்றிற்கு வண்ணம் தீட்டுங்கள்.

தியா 47–இல் வரும்போது வெளியேறினாள். கிடைத்த தங்க நாணயங்கள் எத்தனை? எந்தெந்த எண்ணுள்ள கட்டங்களிலிருந்து நாணயங்கள் கிடைத்திருக்கும்? எழுதுங்கள். அவற்றிற்கு வண்ணம் தீட்டுங்கள்.





7

# கூடியதும் குறைந்ததும்




எந்த கம்பிற்கு நீளம் கூடுதல் உள்ளது?
சரி (✓) அடையாளமிடுங்கள்.

கீழே கொடுக்கப்பட்டுள்ளவையில் ஒவ்வொன்றிலும் நீளம் கூடியதை சரி (✓) அடையாளமிடுங்கள்.














## பட்டம் பறக்க விடுபவர்கள்

குழந்தைகள் பட்டம் பறக்க விடுவதைப் பார்த்து அஜினவ் ஓடி வந்தான்.

யாருடைய பட்டம் கூடுதல் உயரத்தில் பறக்கிறது?

மிக உயரத்திலுள்ள பட்டத்தின் நூலுக்கு சிவப்பு வண்ணம் கொடுங்கள்.




அம்மா!
என்னால் இந்தப் பலாப்பழத்தைத் தூக்க முடியவில்லை.
அதை நான் தூக்குகிறேன். நீ எடை குறைந்த பலாப்பழத்தை எடு.

## படங்களைப் பாருங்கள்.

ஒவ்வொரு வரிசையிலும் அதிக எடை உள்ளதை வட்டம் வரையுங்கள்.

 

 

 

 

 

அதிக எடை யார்?

சரி (✓) அடையாளமிடுங்கள்.



அதிக எடை ஏற்றிய படகு எது?

சரி (✓) அடையாளமிடுங்கள்.





## வண்ணம் தீட்டுங்கள்.



அதிக எடை தூக்கி நிற்பவர் யார்?
வட்டத்திற்கு வண்ணம் கொடுங்கள்.

### கூடுதல் வேண்டும்.

உயரத்திலுள்ள காய் பறிக்க
நீளம் உள்ள கம்பு வேண்டும்.

உயரத்தில் பட்டம் விட
நீளம் கூடிய நூல் வேண்டும்.

எடை கூடிய பொருட்களைத் தூக்க
கைகளுக்குப் பலம் வேண்டும்.

அதிக தண்ணீர் உள்ள பாத்திரம்
பெரியதாகத் தான் இருக்கும்.

## தாகம் அகற்றலாம்







எந்தத் தம்ளரில் கூடுதல் எலுமிச்சை பானம் உள்ளது?

## படத்தைப் பார்த்து சொல்லுங்கள்.

1



2



3



4



5



6



படத்தைப் பார்த்தீர்களல்லவா. இப்பாத்திரங்களில் எதை எல்லாம் தூக்க முடியும் சொல்லுங்கள். எழுதுங்கள்.

1 ..................................................................

2 ..................................................................

3 ..................................................................

4 ..................................................................

5 ..................................................................

6 ..................................................................

இவற்றில் எந்தப் பாத்திரத்தில்

அதிக தண்ணீர் இருக்கும்?

கீழே அந்த பாத்திரத்தின் படத்தை வரையுங்கள்.

வண்ணம் தீட்டுங்கள்...



8

# நாணய கிலுக்கம்



## நாணய கண்காட்சி



அனுவும் ஜித்துவும் கிராமத்தில் நடைபெறும் திருவிழா காணச் சென்றனர். அவர்கள் நாணய கண்காட்சி நடைபெறும் அரங்கிற்குச் சென்றனர்.

**உங்களுக்குத் தெரிந்த நாணயங்களை வட்டமிடுங்கள்.**



50 ரூபாய் நோட்டும் 100 ரூபாய் நோட்டும் ஒரே அளவிலா உள்ளது? சேர்த்து வைத்து பாருங்கள்.

பிற நோட்டுகளையும் சேர்த்து வைத்து பாருங்கள்.





அவர்கள் ஐஸ்கிரீம் கடைக்குச் சென்றனர்.




இருவரும் ஐஸ்கிரீம் வாங்கினர். ஒன்றிற்கு 15 ரூபாய்.
அனு மூன்று ரூபாய் நோட்டுகள் கொடுத்தாள்.



அவள் கொடுத்தது எத்தனை ரூபாய்? ☐

ஜித்து ரூபாய் நோட்டுகள் இரண்டு கொடுத்தான்.

எந்தெந்த நோட்டுகள் கொடுத்தால் 15 ரூபாய் ஆகும்? ☐ ☐


GIANT EEL
TICKE
20 RUP ES
140




கீழே அனுவின் பர்சில் உள்ள நோட்டுகள்.



ஆகாய ராட்டில் ஏறுவதற்கான டிக்கெட் எடுக்க இந்தத் தொகை போதுமா?

இனி எத்தனை ரூபாய் வேண்டும்? [ ] ரூபாய்

மீதி ரூபாயை ஜித்து கொடுத்தான்.
எந்தெந்த நாணயங்கள் எத்தனை வீதம் ஜித்து கொடுத்தான்? கணக்கிடுங்கள்.

## டிக்கெட் எடுக்குமிடம்




அவர்கள் நான்கு பேரும் ஆகாயராட்டில் ஏறினர்.

## விலை கணக்கிடலாம்



| விலை விபரப் பட்டியல் | |
|---|---|
| பொருள் | விலை |
| கிரையோண் | 5 ரூபாய் |
| வாட்டர் கலர் | 10 ரூபாய் |
| இரப்பர் | 2 ரூபாய் |

ஆதித்யா கடையிலிருந்து கிரையோண், வாட்டர்கலர், இரப்பர் வாங்கினான்.

மூன்றிற்கும் சேர்த்து விலை என்ன ?

ஆதித்யா என்னென்ன ரூபாய் நோட்டுகளையும் நாணயங்களையும் கொடுத்தான்?

மனு கிரையோணும் இரப்பரும் வாங்கினான். மொத்தம் எத்தனை ரூபாய் கொடுக்க வேண்டும்?

என்னென்ன நாணயங்களையும் ரூபாய் நோட்டுகளையும் கொடுத்திருப்பான்?

## நாணயமாக்குவோம்.

அனு, ஜித்து, ஆயிசா, முருகன், தாமஸ் ஆகியோர் ரூபாய் நோட்டுகளை நாணயங்களாக மாற்றி எடுத்தனர்.

யாரெல்லாம் சரியான முறையில்
ரூபாய் நோட்டுகளுக்குச் சமமான நாணயங்கள் எடுத்தனர்?
பெயர் எழுதுங்கள்.



## கடைக்கு



| விலை விபரப்பட்டியல் | |
|---|---|
| பொருள் | விலை |
| பென்சில் | 5 ரூபாய் |
| பேனா | 10 ரூபாய் |
| நோட்டுப்புத்தகம் | 20 ரூபாய் |

ரூபேசும் அவர் மகனும் கடைக்குச் சென்றனர்.

பென்சிலும் பேனாவும் வாங்கினார்.

மொத்தம் எத்தனை ரூபாய் கொடுக்க வேண்டும்? ☐

ஒரு பென்சிலின் விலை ☐ ரூபாய்

ஒரு பேனாவின் விலை ☐ ரூபாய்

ஒரு பென்சிலும் ஒரு பேனாவும் சேர்த்து விலை ☐ ரூபாய்

இரண்டு பென்சிலும் ஒரு பேனாவும் சேர்த்து விலை ☐ ரூபாய்

எவ்வாறு கணக்கிட்டீர்கள் சொல்லுங்கள். ☐

## நாணயங்களை ரூபாய் நோட்டுகளாக்குவோம்.

**ஒவ்வொரு குழுவிலுமுள்ள நாணயங்களுக்குச் சமமான ரூபாய் நோட்டு எதுவென கண்டுபிடியுங்கள் அவற்றை வரைந்து இணையுங்கள்.**




















## நாணயங்களைக் கூட்டலாம்

மேரியிடம் 

ரூபாய் உள்ளது.

பதினைந்து ரூபாய் ஆக வேண்டுமெனில் எந்தெந்த நாணயங்களைச் சேர்க்க வேண்டும்?



எந்தெந்த நாணயங்களைச் சேர்த்தால் 20 ரூபாய் ஆகும்? வெவ்வேறு முறைகளில் கண்டுபிடியுங்கள்.



# நாணயங்கள் எத்தனை



10 ரூபாய்



6 ரூபாய்



7 ரூபாய்

என்னிடம் உள்ள
2 நாணயங்கள்
கொடுத்தால்
வளையல்
வாங்கலாம்.

பீப்பி வாங்க
என்னிடம் உள்ள
3 நாணயங்கள்
வேண்டும்.



நாணயம் எது?

☐



நாணயம் எது?

☐



என்னிடம்
2 நாணயம்
உள்ளது. அதை
கொடுத்தால் மாலை
வாங்கலாம்

நாணயங்கள்
எதுவாக இருக்கும்?

☐ ☐

## அன்பு உண்டியல்

வகுப்பறையிலுள்ள அன்பு உண்டியலைத் திறந்தனர்.
ஜித்து நாணயங்களைத் தரம் பிரித்தான்.




மொத்தம் எத்தனை ரூபாய்?

| | எண்ணிக்கை | ரூபாய் |
|---|---|---|
| 1 ரூபாய் நாணயங்கள் | 8 | |
| 2 ரூபாய் நாணயங்கள் | 10 | |
| 5 ரூபாய் நாணயங்கள் | 4 | |
| 10 ரூபாய் நாணயங்கள் | 5 | |




நாணயங்கள் 10 ரூபாயின் குழுக்களாக வைத்தனர்.
மீதியுள்ளவற்றை ஒரு குழுவாகவும் வைத்தனர்.

எத்தனைக் குழு? ☐ எத்தனை ரூபாய்? ☐

மீதியுள்ள ரூபாய் எத்தனை? ☐

எவ்வாறு கணக்கிட்டீர்கள்? சொல்லுங்கள்.



# 9

# நேரமாச்சு



ஜனவரி
1
புதன்

# மியாவின் டயரி.

எனது ஒரு நாள்



காலையில் அம்மா எழுப்பினார்.



எழுந்து பல் துலக்கினேன்.



குளிப்பதற்கு நேரம் அதிகமானது.



அப்பா தோசையும்
சட்னியும் தந்தார்.




பள்ளி வாகனத்தில் சென்றதால்
சீக்கிரமாகப் பள்ளியை சென்றடைந்தேன்.



மதியம் வரை, ரேணுகா
ஆசிரியையோடு இருந்தோம்.



மதியம் பள்ளியிலிருந்து மதிய உணவு எனக்கு விருப்பமான கறிகள் கிடைத்தது. நல்ல சுவை.

மதியத்திற்கு பிறகு கணித புத்தகத்தில் படம் வரைந்தோம்.





மாலையில் நண்பர்களோடு கிரிக்கெட் விளையாடினேன்.



இரவு சப்பாத்தி
சாப்பிட்டேன்.



“மகளே, 9 மணியாச்சு இனி தூங்கு”
அம்மா சொன்னார்.

## படங்களைப் பார்த்து டயரி எழுதுவோம்.



மியா என்னென்ன பார்த்தாள்?

எங்கெல்லாம் சென்றாள்?

என்னவெல்லாம் செய்தாள்?









## எனது டயரி

நீங்கள் ஞாயிற்றுக்கிழமை எங்கெல்லாம் சென்றீர்கள்? என்னென்ன செய்தீர்கள்? அதனைப்பற்றி டயரி எழுதுங்கள். படமும் வரையுங்கள்.



# வாரப்பூரம்




கிழமைகள் ஏழும் சேர்ந்து கொடகர
பூரம் காணச் சென்றன

ஞாயிறு கர்வம் கொண்டு முன்னே செல்ல
பின் தொடர்ந்தனர் பிறர் எல்லாம்

திங்கள் வாங்கியது சாந்துப் பொட்டு
செவ்வாய் சுற்றிப்பார்த்தது பூரக் காட்சியை

புதனும் வியாழனும் சுற்றி நடந்து
கடலையைக் கொறித்தது சந்தோஷத்துடனே




வெள்ளி தேடியது பலகாரத்தை..
சனிக்கு வேண்டியது மணிமாலை

சுற்றி நடந்து நடக்கும் வேளை
பட பட வெடித்தது பட்டாசு

பயந்து ஓடின நாளுகள் ஏழும்
சுவரில் ஏறி இருக்கையை பிடித்தன.

- பி.டி. மணிகண்டன் பந்தலூர்





## நாட்காட்டியை பாருங்கள்.
## நாட்களைச் சொல்லுங்கள். எழுதுங்கள்.

| January | ஜனவரி | | | | | 2025 |
|---|---|---|---|---|---|---|
| ஞாயிறு SUNDAY | திங்கள் MONDAY | செவ்வாய் TUESDAY | புதன் WEDNESDAY | வியாழன் THURSDAY | வெள்ளி FRIDAY | சனி SATURDAY |
| ★ | ★ | ★ | 1 17 | 2 மன்னம் ஜெயந்தி 18 | 3 19 | 4 20 |
| 5 21 | 6 22 | 7 23 | 8 24 | 9 25 | 10 26 | 11 இரண்டாம் சனி 27 |
| 12 28 | 13 29 | 14 1 | 15 2 | 16 3 | 17 4 | 18 5 |
| 19 6 | 20 7 | 21 8 | 22 9 | 23 10 | 24 11 | 25 12 |
| 26 குடியரசு தினம் 13 | 27 14 | 28 15 | 29 16 | 30 17 | 31 18 | ★ |

2025 ஜனவரி மாதத்தில் எத்தனை விடுமுறை நாட்கள் உள்ளன? ____

புதுவருட ஆரம்பம் எந்தத் தேதி, எந்தநாள்?

____ ____

## சுத்தமான பள்ளி.

பெற்றோர்களின் கூட்டம் ஞாயிற்றுக்கிழமை பள்ளியில் வைத்து நடைபெற்றது. சுகாதார சேனையின் தொடக்க விழா திங்கள்கிழமை நடைபெற்றது. வார்டு உறுப்பினர் வருகை தந்தார். செவ்வாய்கிழமை ஓலைக் கூடைகள் செய்தோம். புதன்கிழமை மண்ணில் குழி தோண்டினோம். வியாழக்கிழமை சுவரொட்டி பிரச்சாரம் நடத்தினோம். வெள்ளிக்கிழமை பெற்றோர்கள் பள்ளியையும், சுற்றுப்புறத்தையும் தூய்மையாக்கினர். சனிக்கிழமை ஊராட்சித் தலைவர் பள்ளிக்கு வந்தார். சுத்தமான பள்ளியாக அறிவித்தார்.



## எனது அனுபவம் (ஒருவாரம்)

உங்களது ஒவ்வொரு நாளினுடையவும் விருப்பமான ஒரு செயலைக் கட்டத்தில் எழுதுங்கள்.

| | |
|---|---|
| ஞாயிறு | |
| திங்கள் | |
| செவ்வாய் | |
| புதன் | |
| வியாழன் | |
| வெள்ளி | |
| சனி | |

## நாட்காட்டியை பார்த்து நிரப்புங்கள்.

| | | | |
|---|---|---|---|
| | 1 | ஜனவரி | புதுவருட ஆரம்பம். |
| | 2 | பெப்ருவரி | |
| | 3 | | |
| | 4 | | கோடை விடுமுறை |
| | 5 | | |
| பள்ளி திறக்கும் நாள் | 6 | | |
| | 7 | | |
| சுதந்திர தினம் | 8 | | |
| | 9 | | |
| | 10 | | |
| குழந்தைகள் தினம் | 11 | | |
| கிறிஸ்துமஸ் | 12 | டிசம்பர் | |

பள்ளி கோடை விடுமுறை எந்த மாதங்களில் வரும்?

உங்கள் பிறந்த நாள் எந்த மாதத்தில்?

அந்த மாதத்திற்கு நீல வண்ணம் தீட்டுங்கள்.

வருடத்தின் கடைசி மாதம் எது?

## எந்த மாதம்?




புதுவருட ஆரம்பம்



குடியரசு தினம்



குழந்தைகள் தினம்



காந்தி ஜெயந்தி



சுதந்திர தினம்



ஆசிரியர் தினம் — செப்டம்பர்

## காலங்கள்


கோடைகாலம்


வசந்தகாலம்


மழைக்காலம்


குளிர்காலம்

ஒவ்வொரு காலத்திற்கும் ஏற்ற படங்களை இணையுங்கள்...



வசந்தகாலம்



கோடைகாலம்



மழைக்காலம்



குளிர்காலம்



**10**

# பொம்மை வேண்டுமா... பொம்மை

பொம்மை வியாபாரம் முடிந்து செபியும், ஜோஜியும் வீடு திரும்பினர்.




விற்பனைக்காக எத்தனை பொம்மை கொண்டு சென்றனர்? ☐

எவ்வாறு கணக்கிட்டீர்கள்? சொல்லுங்கள்.




அவர்கள் 2 நாட்கள் செய்த பொம்மைகளைப் பாருங்கள்

முதல் நாள் செபி 12, ஜோஜி 6

மொத்தம் எத்தனை பொம்மைகள் செய்தனர்?

$$12 + 6 = 10 + 2 + 6$$
$$= 10 + 8$$
$$= 18$$

இரண்டாம் நாள் செபி 7, ஜோஜி 11

பொம்மைகள் மொத்தம் எத்தனை?

$$7 + 11 = 7 + 10 + 1$$
$$= 10 + 8$$
$$= 18$$




இரண்டு நாட்களும் சேர்த்து செபி செய்த பொம்மைகள் எத்தனை?

12 + 7 = ................ + .................. + ..................

= ................ + ..................

= ................

இரண்டு நாட்களும் சேர்த்து ஜோஜி செய்த பொம்மைகள் எத்தனை?

6 + 11 = ................ + .................. + ..................

= ................ + ..................

= ................

## மீதி உள்ளவை.

செபி செய்த பொம்மைகளில் 6 பொம்மைகள் விற்பனை ஆனது. அதில் 2 பொம்மைகள் ஆதிராவும் 4 பொம்மைகள் தாமசும் வாங்கினர். மீதமுள்ள பொம்மைகள் எத்தனை?

| | |
|---|---|
| செபி செய்த பொம்மைகள் | 12 |
| விற்பனை ஆனது | 6 |
| மீதமுள்ள பொம்மைகள் | 12 - 6 |
| முதலில் ஆதிரா வாங்கியதைக் கழிக்கலாம் | 12 - 2 = 10 |
| இனி தாமஸ் வாங்கியதைக் கழிக்கலாம் | 10 - 4 = 6 |

இனி 12–இல் இருந்து 6 ஐ கழித்தால் 12 - 6 = 6

நான்
கண்டுபிடித்தது
6 னோடு 6 கூட்டினால்
12 கிடைக்கும்

ஜோஜி செய்த 11 பொம்மைகளில் 7 பொம்மைகள் விற்பனை ஆனது. மீதி பொம்மைகள் எத்தனை?

| | |
|---|---|
| ஜோஜி செய்த பொம்மைகள் | 11 |
| மீதமுள்ள பொம்மைகள் | 11 - 7 = 4 |
| முதலில் 1 பொம்மை விற்பனை ஆனது | 11 - 1 = 10 |
| பின்னர் 6 பொம்மைகள் விற்பனை ஆனது | 10 - 6 = 4 |

நான்
கணக்கிட்டது
7 உடன் 4 கூட்டினால்
11 கிடைக்கும்

## விற்று தீர்ந்தபோது

செபி செய்த 19 பொம்மைகளில் 14 பொம்மையும் ஜோஜி செய்த 17 பொம்மைகளில் 15 பொம்மையும் விற்பனை ஆனது. ஒவ்வொருவருடைய கையிலும் மீதமுள்ள பொம்மைகள் எத்தனை ?



செபி செய்த பொம்மைகள் ☐

விற்பனை ஆனது ☐

மீதமுள்ளது. ☐ - ☐ = ☐

ஜோஜி செய்த பொம்மைகள் ☐

விற்பனை ஆனது ☐

மீதமுள்ளது ☐ - ☐ = ☐

இரண்டு பேரிடமும் மீதமுள்ள பொம்மைகள் எத்தனை? ☐

# பொம்மைகளின் எண்ணிக்கை

செபியும் ஜோஜியும் செய்த பொம்மைகளின் எண்ணிக்கை தெரியுமல்லவா?

**செபி**

முதல் நாள் - 12
இரண்டாம் நாள் - 7

**ஜோஜி**

முதல் நாள் - 6
இரண்டாம் நாள் - 11

சரியானவற்றிற்கு (✓) இடுங்கள்

தவறெனில் (✗) இடுங்கள்

முதல் நாள் ஜோஜி செபியை விட 6 பொம்மைகள் கூடுதல் செய்தார்.

இரண்டு நாட்களும் சேர்த்து ஜோஜி செய்த பொம்மைகளின் எண்ணிக்கை இருபதை விட மூன்று குறைவாகும்.

இரண்டு நாட்களும் சேர்த்து அதிக பொம்மைகள் செய்தது ஜோஜியாகும்.

செபி முதல் நாள் செய்த பொம்மைகளின் எண்ணிக்கை இரண்டாம் நாளைவிட குறைவாகும்.

செபியும் ஜோஜியும் முதல் நாளும் இரண்டாம் நாளும் செய்த பொம்மைகளின் எண்ணிக்கை சமமாகும்.

## சட்டை செய்வோம்

செபியும் ஜோஜியும் செய்த சட்டையை பார்த்தீர்களா? இடது பக்கத்தைப் போல வலது பக்கத்திலும் படங்கள் வரைந்து சட்டையை அழகாக்குங்கள். வண்ணம் தீட்டுங்கள்.



வண்ண காகிதங்களால் சட்டை செய்து ஒட்டுங்கள்.

## விலை எழுதலாம்.




மிகக் கூடிய விலை எத்தனை?

விலைகள் மிகக்குறைந்திலிருந்து மிகக் கூடியது வரை. (ஏறுவரிசை) வரிசையாக எழுதுங்கள்.

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | | | | | |

சோனுவிடம் ஒரு 50 ரூபாய் நோட்டும் ஒரு 10 ரூபாய் நோட்டும் உள்ளது. சோனுவிற்கு என்னென்ன விலையுள்ள பொம்மை வாங்க இயலும்?

| |
|---|
| |

எவ்வாறு கணக்கிட்டீர்கள்? சொல்லுங்கள்.

சோனுவிற்கு ஏதாவது இரண்டு பொம்மைகள் வாங்க முடியுமா?

## பெட்டிகள் அடுக்கிவைப்போம்

பொம்மைகள் நிறைத்த பெட்டிகள் இரண்டு குழுவாக அடுக்கி வைத்திருப்பதைப் பாருங்கள்.



மொத்த பெட்டிகள் ? $\square + \square = \square$

வேறொரு முறையில் அடுக்கி வைத்துள்ளதைப் பாருங்கள்.



இதுபோன்ற வேறு எந்தெந்த முறைகளில் அடுக்கிவைக்கலாம்?

10 + 8




12 + 6










இரண்டு ஊசியும்
ஒரு நூலும்
வாங்குவதற்கா அல்லது
ஒரு ஊசியும் இரண்டு நூலும்
வாங்குவதற்கா
அதிக ரூபாய் கொடுக்க
வேண்டும்?

## விலையை வரிசையாக எழுதலாம்.




மிகக் கூடிய விலை எத்தனை? ☐

மிகக் குறைந்தது? ☐

பொம்மைகளின் விலையை பெரியதிலிருந்து சிறியது வரை வரிசையாக எழுதுங்கள். ☐

## கடிகாரத்தைப் பாருங்கள்

காலியான கட்டங்களில் எண்களை எழுதுங்கள்.



## பொம்மைகள் எத்தனை?

தாத்தா, பாட்டி, அம்மா, மூவரும் ஞாயிற்றுக்கிழமை பொம்மைகள் செய்தனர். ஒவ்வொருவரும் செய்த பொம்மைகளின் எண்ணிக்கையைப் பாருங்கள் | தாத்தா 4 | பாட்டி 8 | அம்மா 6 |

மூன்று பேரும் சேர்ந்து
எத்தனை பொம்மைகள் செய்தனர்?

$4 + 8 + 6$

$4 + 8 = 4 + 6 + 2$

$= 10 + 2$

$= 12$ பொம்மைகள்

$12 + 6 = 10 + 2 + 6$

$= 10 + 8$

$= 18$ பொம்மைகள்




அவர்கள் செய்த பொம்மைகளில் 3 பொம்மைகள் திங்கள்கிழமையும் 4 பொம்மைகள் செவ்வாய்கிழமையும் விற்பனை ஆனது. மீதியுள்ள பொம்மைகள் எத்தனை?

மூவரும் செய்தது 18 பொம்மைகள்

திங்கள்கிழமை விற்றது 3

பொம்மைகள் மீதி $18 - 3$

$= 10 + 8 - 3$

$= 10 + 5$

$= 15$ பொம்மைகள்

செவ்வாய்கிழமை விற்றது 4

பொம்மைகள் மீதி $15 - 4$

$= 10 + 5 - 4$

$= 10 + 1$

$= 11$ பொம்மைகள்



## யாருக்குப் பரிசு?



பெட்டியிலுள்ள பரிசு வேண்டுமா?

கீழே கொடுக்கப்பட்டுள்ளவற்றை வாசித்து பரிசின் எண்ணைக் கண்டுபிடிக்க வேண்டும்.

- அந்த எண் 6 க்கும் 19 க்கும் இடையிலாகும்.

  எண்களைக் கட்டத்தில் எழுதுங்கள்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | | | |

- அந்த எண் இரண்டிலக்க எண்ணாகும். எனில் தவிர்க்க வேண்டியதை வெட்டுங்கள்.
- 15–ற்கும் 19–ற்கும் இடையிலாகும் (பிற எண்களை வெட்டுங்கள்)

  எனில் எந்தெந்த எண்கள்? ☐
- மீதமுள்ள எண்களில் மிகப்பெரிய எண்ணை நீக்கினால்

  மீதமுள்ள எண்கள் எவை? ☐
- மீதமுள்ள எண்களில் சிறிய எண்ணுமல்ல.

  மீதமுள்ள எண்ணே பரிசிற்கான எண்.

  எண் எது? ☐

## அட்டை விளையாட்டு

இரண்டு, மூன்று அல்லது நான்கு அட்டைகள் தேர்ந்தெடுக்கலாம். அவற்றில் ஒவ்வொரு செட்டிலும் எண்களின் கூட்டுத்தொகை 20 கிடைக்க வேண்டும். 20 கிடைத்தால் பொம்மை பரிசு கிடைக்கும்.

| | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 12 | 5 | 1 | 16 | 13 | 18 | 7 | 16 | 5 | 13 | 6 |
| 4 | 6 | 14 | 18 | 7 | 3 | 14 | 1 | 3 | 18 | 2 |
| 8 | 1 | 2 | 6 | 4 | 1 | 16 | 13 | 8 | 5 | 14 |



நான் எடுத்த அட்டைகள்

☐ + ☐ = 20

☐ + ☐ + ☐ + ☐ = 20

☐ + ☐ + ☐ = 20

அரவிந்திற்கு 3 அட்டையிலிருந்து 20 கிடைத்தது.

அரவிந்த் எடுத்த அட்டைகள் எவை?

□

லைலாவிற்கு 4 அட்டையிலிருந்து 12 கிடைத்தது.

லைலா எடுத்த அட்டைகள் எவை?

□

சோனு 2 அட்டைகள் எடுத்தபோது கூட்டுத்தொகை 17 கிடைத்தது.
அவை எந்தெந்த அட்டைகள்?

□ + □ = □

3 அட்டையிலிருந்து 15 கிடைக்க
எந்தெந்த அட்டைகள் எடுக்க வேண்டும்?

□ + □ + □ = □

வினிதா கீழே கொடுக்கப்பட்டுள்ள 3 அட்டைகள் எடுத்தாள்.
இனி எந்த அட்டையை எடுத்தால் பரிசு கிடைக்கும்?

13 + 4 + 1 + □ = 20






இரண்டு குழந்தைகள் இரண்டு சிறிய கிளாசிலும் அக்கா பெரிய கிளாசிலும் எலுமிச்சை பானம் குடித்தனர். மொத்தம் எத்தனை ரூபாய் கொடுக்க வேண்டும்?

பெரிய கிளாஸ் எலுமிச்சை பானத்தின் விலை ☐

2 சிறிய கிளாஸ் எலுமிச்சை பானத்தின் விலை ☐

எலுமிச்சை பானத்தின் மொத்த விலை? ☐

நான் கண்டுபிடித்தது.



## ஆரஞ்சு விலை என்ன?



1 ஆரஞ்சு விலை 9 ரூபாய்.

2 ஆரஞ்சு வாங்கினால் எத்தனை ரூபாய் கொடுக்க வேண்டும்? ☐

இரண்டு 10 ரூபாய் நாணயங்கள் கொடுத்தால் மீதி எத்தனை ரூபாய் கிடைக்கும்? ☐

## பேசும் பொம்மை






பொம்மை என்ன சொன்னது? எழுதுங்கள்.

2, 4, 6, 8, 10, 12, .......
அடுத்த எண் எது? ☐

மிகப்பெரிய ஓரிலக்க எண் எது? ☐

15-ற்கும் 17-ற்கும் இடையிலுள்ள எண் எது? ☐

6-உம் 7-உம் கூட்டினால் கிடைக்கும் எண்?

18 உடன் இரண்டு கூட்டினால் கிடைக்கும் எண் எது?

89–னோடு ஒன்று கூட்டினால் கிடைக்கும் எண்?

45-ல் இருந்து 15 கழித்தால் கிடைக்கும் எண்?

59-லிருந்து 10 ஐ கழித்தால் கிடைக்கும் எண் எது?

50-உம் 30-உம் கூட்டி அத்துடன் 19 கூட்டினால் கிடைக்கும் எண் எது?

எனது கேள்விகள்.

## ஒன்று சேர்வோம்... பாட்டு பாடுவோம்.

ஒரு பாட்டுபாடு ஆன்ஸ்...



பூந்தோட்டத்தில் தேன் பருக.
வண்டுகள் பத்து வந்தன.
முன்னால் சென்றது இரண்டு
பின்னால் சென்றது நான்கு
மீதி எத்தனை சொல்வாயா?

எனது கேள்விகள்

## எண் மாஜிக்

ஒரு கூடையில் 17 பூக்கள் இருந்தன. 3 பூவை ஜான்வி எடுத்தாள்.

மீதமுள்ள பூக்கள் எத்தனை? ☐

லிசி 4 பூக்களைக் கூடையில் வைத்தாள்.

இப்போது கூடையிலுள்ள பூக்கள் எத்தனை? ☐

ராஜ் 1 பூவை கூடையிலிருந்து எடுத்தான்.

இப்போது கூடையிலுள்ள பூக்கள் எத்தனை? ☐



## மாங்காய் கணக்கு.

ஒரு பையில் 15 மாங்காய் உள்ளது.

3 மாங்காய் சுகறா எடுத்தாள்.

2 மாங்காய் லிசி எடுத்தாள்.

பையில் மீதியுள்ள மாங்காய் எத்தனை?

எவ்வாறு கணக்கிட்டீர்கள்?

நான் கணக்கிட்டது.

நண்பன் கணக்கிட்டது.

11

# எண்ணலாம் அடுக்கி வைக்கலாம்



## படத்தைப் பாருங்கள் எண்ணி எழுதுங்கள்.

அன்விதும் நண்பர்களும் சில பொருட்கள் நிரத்தி வைத்துள்ள படத்தை பாருங்கள்.

| | |
|---|---|
| பென்சில் |  |
| இரப்பர் |  |
| ஸ்கெயில் |  |
| கட்டர் |  |

ஒவ்வொன்றின் எண்ணிக்கையை கட்டத்தில் எழுதுங்கள்.









விடை எழுதுங்கள்.

எண்ணிக்கை குறைந்தது எது?

எண்ணிக்கை கூடியது எது ?

கட்டரைவிட எத்தனை கூடுதல் பென்சிலின் எண்ணிக்கை ?

ஸ்கெயிலை விட எத்தனை குறைவு இரப்பரின் எண்ணிக்கை?

அன்விதின் பள்ளியில் கூட்டம் நடைபெறுகிறது. வெளியே நிறுத்தியுள்ள வாகனங்களை அவர்கள் எண்ணி பார்த்தனர்.



படத்தை பார்த்து வாகனங்களின் எண்ணிக்கையை எழுதுங்கள்.

| | |
|---|---|
| கார் | |
| ஆட்டோ | |
| மூன்று சக்கரசைக்கிள் | |
| சைக்கிள் | |
| ஸ்கூட்டர் | |
| பஸ் | |

கூடுதல் எண்ணிக்கையுள்ள வாகனம் எது?

குறைந்த எண்ணிக்கையுள்ள வாகனம் எது?

படத்தில் உள்ள மொத்த வாகனங்கள் எத்தனை?

அன்விதும் நண்பர்களும் நர்சரி வகுப்பிற்கு சென்றனர். அலமாரியிலுள்ள விளையாட்டு பொருட்களை பார்த்தனர்.



விளையாட்டு பொருட்களின் எண்ணிக்கை எழுதுங்கள்.

| கார் | பந்து | பேட் | கரடி | பூ |
| --- | --- | --- | --- | --- |
|  |  |  |  |  |

கீழே கொடுக்கப்பட்டுள்ளவை சரியெனில் (✓) தவறெனில் (✗) இடுங்கள்.

1. பந்தைவிட கூடுதலாகும் பேட்
2. கரடியைவிட குறைவு பூ
3. காரும், கரடியும் சம எண்ணிக்கையில் உள்ளன.
4. ஒரே எண்ணிக்கையுள்ள விளையாட்டு பொருட்கள் இல்லை.

## அரங்கு



படத்திலுள்ள வடிவங்களுக்கு வண்ணம் தீட்டுங்கள்.

ஒரே போலுள்ள வடிவத்திற்கு ஒரே வண்ணம் தீட்டுங்கள்.

எண்ணி எழுதுங்கள்.

|  |  |  |  |
| --- | --- | --- | --- |
| | | | |

## பூக்களைப் பாருங்கள். எண்ணிக்கையை பட்டியலிடுங்கள்.

அன்விதின் வகுப்பறை ஜன்னலை சுற்றி வரைந்துள்ள படங்களை பாருங்கள் எண்ணிக்கை எழுதுங்கள்.



| பூ | எண்ணிக்கை |
|---|---|
| சிவப்பு | |
| நீலம் | |
| மஞ்சள் | |
| வயலட் | |

ஐந்து இதழ் உள்ள பூக்கள் எத்தனை?

எந்த நிறத்திலுள்ள பூக்கள் கூடுதல் உள்ளது?

சமமான எண்ணிக்கையுள்ள பூக்களின் நிறம் எது?

படத்தில் எத்தனை பூக்கள் உள்ளன?

# இந்திய அரசியலமைப்புச் சட்டம்

## பாகம் 4 அ

### இந்தியக் குடிமக்களின் அடிப்படைக் கடமைகள்

**51 அ பிரிவுக்கூறு**

(அ) இந்திய அரசியலமைப்புச் சட்டத்துக்கு இணங்கி ஒழுகுதலும், அதன் உயரிய நோக்கங்களையும் நிறுவனங்களையும் மற்றும் தேசியக் கொடியையும் தேசிய கீதத்தையும் மதித்தலும்;

(ஆ) நம் நாட்டின் விடுதலைப் போராட்டத்திற்கு எழுச்சியூட்டிய உயர்ந்த எண்ணங்களை நெஞ்சில் நிறுத்திப் பின்பற்றுதல்;

(இ) இந்தியாவின் இறையாண்மையையும் ஒற்றுமையையும் நேர்மையையும் நிலைநிறுத்திக் காப்பாற்றுதல்;

(ஈ) இந்திய அரசு வேண்டும்போது நாட்டைப் பாதுகாக்கவும் நாட்டுக்காகத் தொண்டு புரியவும் தயாராயிருத்தல்;

(உ) சமயம், மொழி, வட்டாரம், இன வேற்றுமைகள் வரம்பு மீறுகிற நிலையில் அதற்கு எதிராக எல்லா இந்திய மக்களிடையேயும் நல்லிணக்கத்தையும், பொதுவான உடன்பிறப்பு உணர்வையும் வளர்த்தல்; பெண்மையின் மதிப்புக்கு இழிவு ஏற்படுத்தும் செயல்களை விட்டொழித்தல்;

(ஊ) நமது கலவைப் பண்பாட்டின் உயர்ந்த மரபை மதித்துப் பேணுதல்;

(எ) காடுகள், ஏரிகள், ஆறுகள், வனவிலங்குகள் உள்ளிட்ட இயற்கையான சுற்றுப்புறச் சூழலைப் பாதுகாத்து மேம்படுத்தலும், வாழும் உயிர்கள் மீது இரக்கம் கொள்ளுதலும்;

(ஏ) அறிவியல் சார்ந்த மனப்பாங்கு, மனிதநேயம், விசாரித்து அறியும் உள்ளறிவுத்திறம், சீர்திருத்தத்திறம் ஆகியவற்றை வளர்த்தல்.

(ஐ) பொது உடைமைகளைப் பாதுகாத்தலும் வன்முறையை விட்டொழித்தலும்;

(ஒ) பெரும் முயற்சிகள் சாதனைகளின் உயர்ந்த படிகளை நோக்கி இடைவிடாமல் முன்னேறத்தக்க வகையில் தனிமனித கூட்டு நடவடிக்கையின் எல்லாப் பரப்புகளிலும் முதன்மை நிலை எய்த முயலுதல்;

(ஓ) ஆறு வயதிற்கும் பதிநான்கு வயதிற்கும் இடைப்பட்ட பருவமுள்ள தன் குழந்தைக்கு, அதன் பெற்றோர் அல்லது பாதுகாவலர் கல்விக்கான வாய்ப்புகளை ஏற்படுத்திக் கொடுத்தல்;

ஆகிய இவையனைத்தும் ஒவ்வொரு இந்தியக் குடிமகனின் அடிப்படைக் கடமைகளாகும்.

# குழந்தைகளின் உரிமைகள்

*அன்பார்ந்த குழந்தைகளே,*

*உங்கள் உரிமைகள் எவையென்று தெரியவேண்டாமா? உங்கள் உரிமைகளைப் பாதுகாக்கத் தற்போது ஓர் ஆணையம் செயல்பட்டு வருகிறது. அதன் பெயர் கேரள மாநிலப் பாலர் உரிமைப் பாதுகாப்பு ஆணையம் என்பதாகும். உரிமைகள் பற்றிய அறிவு, உங்கள் பங்கேற்பு, பாதுகாப்பு, சமூகநீதி போன்றவற்றை உறுதிப்படுத்த ஆக்கமும் ஊக்கமும் அளிக்கிறது இவ்வாணையம். உங்கள் உரிமைகள் எவையென்று பார்ப்போம்.*

- பேசுவதற்கும்கருத்து வெளியீட்டிற்குமான சுதந்திரம்.
- தனிநபர் சுதந்திரம் மற்றும் உயிர் பாதுகாப்பு உரிமை.
- வாழ்வதற்கும் வளர்வதற்குமான உரிமை.
- ஜாதி-மத-இன-நிற சிந்தனைகளுக்கு அப்பாற்பட்டு மதிப்பதற்கும் அங்கீகரிப் பதற்குமான உரிமை.
- உடல், உள, பால் பலாத்காரங்களிலிருந்து பாதுகாத்துக்கொள்வதற்கும் பராமரிப்பதற் குமான உரிமை.
- பங்கேற்பிற்கான உரிமை.
- குழந்தைத் தொழில் மற்றும் ஆபத்தான தொழில்களிலிருந்து விடுதலை.
- குழந்தைத்திருமணத்திலிருந்து பாதுகாப்பு.
- தமது பண்பாட்டை அறிந்து அதற்கேற்ப வாழ் வதற்கான உரிமை.
- புறக்கணிப்புகளிலிருந்து பாதுகாப்பு.
- இலவச - கட்டாயக் கல்விக்கான உரிமை.
- விளையாடுவதற்கும் கற்பதற்குமான உரிமை.
- அன்பும் பாதுகாப்பும் நிறைந்த குடும்பத்தையும் சமூகத்தையும் பெறுவதற்கான உரிமை

## சில கடமைகள்

- பள்ளிக்கூடம், பொதுஇடங்கள் ஆகியவற்றை அழியாமல் பாதுகாக்க வேண்டும்.
- பள்ளிக்கூடத்திலும் கற்றல் செயல்பாடு களிலும் ஒழுக்கத்தைக் கடைபிடிக்க வேண்டும்.
- பள்ளிக்கூட அதிகாரிகள், ஆசிரியர், பெற்றோர், உடன் பயில்வோரை மதிக்கவும் அங்கீகரிக் கவும் வேண்டும்.
- ஜாதி-மத-இன-நிறச் சிந்தனைகளுக்கு அப்பாற் பட்டு எல்லோரையும் மதித்து அங்கீகரிப்பதற் கான மன நிலையை அடையவேண்டும்


*தொடர்புகொள்ள வேண்டிய முகவரி:*

**கேரளமாநிலக் குழந்தைகள் உரிமைப் பாதுகாப்பு மையம்**

ஸ்ரீ கணேஷ், TC. 14/2036, வான்ரோஸ் ஜங்ஷன்,

கேரளா பல்கலைகழகம் P.O, திருவனந்தபுரம்–34, தொலைபேசி : 0471–2326603

இ-மெயில் : childrights.cpcr@kerala.gov.in, rte.cpcr@kerala.gov.in

www.kescpcr.kerala.gov.in

**சைல்டு ஹெல்ப் லைன்-1098, கிரைம் ஸ்டோப்பர்-1090, நிர்பயா-1800 425 1400**

**கேரள போலீஸ் ஹெல்ப் லைன் - 0471-324300/44000/45000**


*Online* ***R. T. E Monitoring : www.nireekshana.org.in***